06.08.2025

OS. No. 51/2020

**PW 1 – விக்னேஷ்**

**1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு தாக்கல் செய்யும்பொழுது நான் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் கள்ளர் தெருவில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். வழக்கிற்கு தேவையான விவரங்களை என் தாயார்தான் சொன்னார். பிரமாண வாக்குமூலத்திற்கான விவரங்களை என் தாயார்தான் சொன்னார். வழக்கு சொத்து விவரங்கள் என் தாயாருக்குதான் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் இருந்த வீட்டிற்கு கதவு எண் இல்லை. என் தாத்தா வீட்டிற்கு கதவு எண் உள்ளது. நான் தற்போது சூரியூர் எஸ்.எஸ் காலனியில் குடியிருக்கிறேன். அது திருவரம்பூர் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது அந்த விலாசத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தையார் 2011-ஆம் ஆண்டு இறந்தார். மீண்டும் சாட்சி தான் ஐந்தாவது படிக்கும்பொழுது இறந்தார், எந்த வருடம் என்று ஞாபகமில்லை என்று கூறுகிறார். குடும்ப மாடு குத்தி என் தகப்பனாருக்கு காயம் ஏற்பட்டு நீண்ட சிகிச்சைக்கு பின் இறந்துவிட்டார், என் தகப்பனாருக்கான இறப்புச் சான்றிதழ் உள்ளது. என் தகப்பனார் இறந்தபோது அவருக்கு என்ன வயது என்று தெரியாது. சிறுநீரக கோளாறு காரணமாகதான் என் தகப்பனார் இறந்தார் என்றால், மாடு முட்டியதில் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இறந்தார். என் தகப்பனார் நான் சொல்லியவாறு தான் இறந்தார் என்பதை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது பிராதிலோ சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. ../

அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய இயலாது. நான் பி.இ.(சிவில்) முடித்துள்ளேன். நான் இலுப்பூரில் பிறந்தேன். என் அப்பாவை பெற்ற தாத்தா ஆறுமுகம். என் தாத்தாவின் அப்பா பெயர் எனக்கு தெரியாது.

**(1 முதல் 4 வரையான பிரதிவாதிகள்தரப்பு குறுக்குவிசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.